1990 மார்ச் 29]

கூட்டுறவு அச்சகம்

* 3109—திரு. வி. பி. இராசன் :
மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

இராஜபாளையத்தில் கூட்டுறவு அச்சகம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. வி. பி. இராசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இராஜபாளையத்தில் கூட்டுறவு அச்சகம் அமைக்க வேண்டுமெனில் ஏதாவது விதிமுறைகள் இருக்கிறதா? அப்படி விதிமுறைகள் இருந்தால் அதை நான்,அமைச்சர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு மாவட்டத்திற்கு, மாவட்டத் தலைநகரில் ஒரு கூட்டுறவு அச்சகம் நிறுவப்பட வேண்டுமென்கிற அடிப்படையில் 16 கூட்டுறவு அச்சகங்கள் மாவட்ட தலைநகரங்களிலே இயங்கிக் கொண்டிருக்கின்றன. அந்த வகையில் காமராஜர் மாவட்டத்தில், விருதுநகரிலே அத்தகைய கூட்டுறவு அச்சகம் அமைக்கப்பட வேண்டும் என்கின்ற செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இப்போது இருக்கிறது. அந்த காரணத்தினாலேதான் இராஜபாளையத்திலே கூட்டுறவு அச்சகம் அமைப்பதற்கான வாய்ப்பு இல்லை.

திரு. எஸ். காதர்பாட்சா என்கிற வெள்ளைச்சாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாவட்டத்திற்கு ஒரு தலைமையிடத்திலே கூட்டுறவு அச்சகம் அமைக்கும் கொள்கை இருப்பதாகத் தெரிவித்தார்கள். ஆகவே, என்னுடைய இராமநாதபுரம் மாவட்டம் புதிதாக உருவாக்கப்பட்ட மாவட்டம். அங்கே கூட்டுறவு அச்சகமே இல்லை. நடப்பு ஆண்டிலே கூட்டுறவு அச்சகத்தை அங்கே துவங்குவதற்குண்டான திட்டம் அரசின் பரிசீலனையிலே உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாவட்டத்திற்கு ஒரு கூட்டுறவு அச்சகம் அமைக்கப்படவேண்டும் என்கின்ற அடிப் படையிலே இந்த அரசு சாத்தியக்கூறுகளை பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது. இப்போது புதிதாகப் பிரிக்கப்பட்ட மாவட்டங்களில் அத்தகைய அச்சகங்களை உருவாக்குவதற்கு அரசு பரிசீலித்துக்கொண்டிருக்கிறது.

திரு. என். பெரியசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சிதம்பரனார் மாவட்டம் புதிதாக பிரிக்கப்பட்டு அந்த மாவட்டத்தில் தலைமை அச்சகம் இது வரைக்கும் இல்லாமல் இருக்கிறது. அங்கே கூட்டுறவு அச்சகம் அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

9.40 மணி

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, ஏற்கெனவே அரசாங்கம் முன் வந்திருக்கிறது.

திரு. அ. இராசேந்திரன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இயங்கிக் கொண்டிருக்கிற கூட்டுறவு அச்சகங்கள் லாபத்தில் இயங்குகிறதா அல்லது நட்டத்தில் இயங்குகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இருக்கக்கூடிய 18 கூட்டுறவு அச்சகங்களில் சில அச்சகங்கள் நட்டத்தில் செயல்பட்டுக் கொண் டிருக்கின்றன. பெரும்பாலான அச்சகங்கள் லாபத்தில்தான் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன.

திரு. எம். முகமது சித்திக் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற கூட்டுறவு அச்சகங்கள் தமிழ்நாட்டில் எத்தனை இடங்களில் இருக்கின்றன என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாவட்டத்திற்கு ஒன்று என்ற அடிப்படையில் 16 இடங்களிலும், பர்மா அகதி களுக்கு ஒன்று என்ற அடிப்படையில் சென்னையில் ஒன்றும், பல்கலைக்கழகத்திற்கு ஒன்று என்ற முறையில் மதுரையில் ஒரு அச்சகமும் ஆகமொத்தம் 18 அச்சகங்கள் கூட்டுறவுத் துறையில் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன.

1990 மார்ச் 29]

திரு. வ. முல்லைவேந்தன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு அச்சகங்கள் எல்லாம் தொடங்கப்பட்ட காலத்திலிருந்து அங்கே பழைய இயந்திரங்களையே வைத்துக் கொண்டு, வேலைகளை டெண்டர் மூலம் பெற்று தனியாருக்குக் கொடுத்து, லாபத்தையே குறிக்கோளாகக்கொண்டு பல அச்சகங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அந்த நிலையை மாற்றவும், கூட்டுறவு அச்சகங்களை நவீனப்படுத்தவும், நவீன இயந்திரங்களை நிறுவவும் அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்: மாண்புமிகுபேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சில அச்சகங்களில் பழைய இயந்திரங்கள் இருக்கின்றன. எத்தனை பழைய இயந்திரங்கள் இருக்கின்றன என்று கணக்கிடப்பட்டு வருகிறது. அவைகளை மாற்ற வேண்டுமென்று அச்சகங்களிலிருந்து வேண்டுகோள் அரசுக்கு வந்தால், அதுபற்றி பரிசீலித்து நடவடிக்கை எடுக்கப்படும். தேவைப்பட்டால் புதிய இயந்திரங்கள் மாற்றப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு துணை சபாநாயகர் அவர்களே, இந்தக் கூட்டுறவு அச்சகங்களில் பணியாற்றும் பணியாளர்கள், மாநில அரசுப் பணியாளர்களைப் போல ஊதியம் பெறுகிறார்களா? இப்போது மாநில அரசு ஊழியர்கள் மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையாக ஊதியங்கள் பெறுகிறார்களே, அது கூட்டுறவு அச்சகங்களில் பணியாற்றும் ஊழியர்களுக்கும் பொருந்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, விரிவான விளக்கங்கள் பெற தனியாகக் கேள்வி போடவும்.

பச்சையாறு அணை.

*364—திரு. ஆச்சியூர் எம். மணி,

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) நாங்குநேரி பகுதியில் பச்சையாறு அணை கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?